விருதுநகர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண்:2636/ அ1/14, நாள் 30.01.2015

பொருள்:- தமிழ்நாடு அமைச்சுப் பணி– பள்ளிக் கல்வித்துறை – நிலை III சுருக்கெழுத்து தட்டச்சர் நேரடி நியமனம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தொகுதி IV தேர்வு தேர்வாணையம் மூலம் தேர்வு செய்தது – திருமதி. ஆர். கலைவாணி சுருக்கெழுத்து தட்டச்சர் நிலைIIIமுதன்மைக் கல்விஅலுவலகம், விருதுநகர் என்பாருக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவு வழங்குதல் சார்பாக

பார்வை:
1.பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி) அவர்களின் செயல்முறைகள்ந.க.எண்92215/அ4/இ1/2012 நாள்.29.11.12
2. முதன்மைக் கல்வி அலுவலர் விருதுநகர்அவர்களின் கடிதம் ந.க.எண் 9703/அ1/2012 நாள்.30.11.2012
3. பள்ளிக்கல்விஇயக்குநரின் கடிதம் 64014/அ4/இ1/2014 நாள்16.12.2014

******

உத்தரவு:-

பார்வை (1)ல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் பணியாளர் தொகுதி சென்னை அவர்களின் செயல்முறையின் படி தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் (Group Iv) மூலம் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III பணிக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை (2)ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி திருமதி. ஆர். கலைவாணி என்பார் விருதுநகர் மாவட்டமுதன்மைக் கல்வி அலுவலகத்தில் சுருக்கெழுத்து தட்டச்சராக நியமனம் செய்யப்பட்டு 30.11.2012 மு.ப முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (3)ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநர் கடிதத்தில் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியில் பணிவரன்முறை செய்யும் பொருட்டு நியமன அலுவலர் என்ற முறையில் விருதுநகர் முதன்மைக் கல்வி அலுவலரே உரிய விதிகளின்படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாம் என அறிவுறுத்தப்பட்டது.

எனவே விருதுநகர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி.ஆர்.கலைவாணி, சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III என்பாருக்கு பணியில் சேர்ந்த நாளான 30.11.2012 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்திரவு வழங்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
விருதுநகர்.
30/1/15

பெறுநர்

திருமதி. ஆர்.கலைவாணி,
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III
முதன்மைக் கல்வி அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம்,
விருதுநகர்.

30.1.15

நகல் : நியமனக் கட்டிற்கு
நகல் : பணிப் பதிவேட்டிற்கு